**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 133/2022
Prosecution side witness for P.W.12

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. இசக்கிமுத்து** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.06.2026**

A3, A4 are present. Others are absent , U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் கடந்த 20 வருடங்களாக தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி, வீரவாஞ்சிநகர் 4 வதுதெருவில் குடியிருந்து வருகிறேன். முதலில் தீப்பெட்டி ஆபீசில் வேலை செய்தேன், தற்போது பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். சாட்சி மாரியப்பனை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. குறிப்பாக இசக்கிதுரை, துரை ஆகியோர்களை தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது, எங்கள் முன்பாக எதிரிகள் யாரையும் கைது செய்யவில்லை. எங்கள் முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை. இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன மணியை தெரியும். அவர் எனது மைத்துனர். இவ்வழக்கு சம்மந்தமாக என்ன தெரியும் என்று கேட்டால் மணி இறந்தது சம்மந்தமாக அவர் இறப்பு துஷ்டிக்கு சென்றிருந்தேன். வேறு ஒன்றும் தெரியாது. எதிரி துரை கொடுத்ததாக கூறியுள்ள ஒப்புதல் வாக்குமூலத்தின் முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். இந்த கையெழுத்தை துஷ்டிக்கு போன சமயத்தில்

போட்டுக்கொடுத்தேன். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ– 12** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 29.03.2022 ஆம் தேதி இரவு 9.00 மணிக்கு கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய ஆய்வாளர் என்னை அழைத்ததன்பேரில் நானும், எங்கள் தெருவை சேர்ந்த பிச்சை மகன் மாரியப்பனும் கோவில்பட்டி பழைய பேருந்து நிலையம் முன்பு நின்று கொண்டிருந்த ஆய்வாளர் முன்பு ஆஜரானோம். அவர் எங்களை சாட்சியாக இருக்க அழைத்ததன்பேரில் நாங்கள் சம்மதித்தோம். எங்கள் இருவர் முன்பும் எதிரி துரையை எவ்வித துன்புறுத்தலோ, தூண்டுதலோ, ஆசைவார்த்தையோயின்றி விசாரிக்க அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல்வாக்குமூலத்தில்தான் நானும், மாரியப்பனும், எதிரி துரையும் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றும் அதுதான் அ.சா.ஆ.12 என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என சொல்லப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 133/2022
Prosecution side witness for P.W.13

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. மாரியப்பன் என்ற மாரிமுத்து | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.06.2026**

A3, A4 are present. Others are absent , U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**முதல் விசாரணை:–**

நான் கடந்த 6 வருடங்களாக தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி, வீரவாஞ்சிநகர் 4 வதுதெருவில் குடியிருந்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சாட்சி இசக்கிமுத்துவை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. குறிப்பாக இசக்கிதுரை, துரை ஆகியோர்களை தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது, எங்கள் முன்பாக எதிரிகள் யாரையும் கைது செய்யவில்லை. எங்கள் முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை. இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன மணியை தெரியும். அவர் எனது மைத்துனர். இவ்வழக்கு சம்மந்தமாக என்ன தெரியும் என்று கேட்டால் மணி இறந்தது சம்மந்தமாக அவர் இறப்பு துஷ்டிக்கு சென்றிருந்தேன். வேறு ஒன்றும் தெரியாது. எதிரி துரை கொடுத்ததாக கூறியுள்ள ஒப்புதல் வாக்குமூலத்தின் 2 வது கையெழுத்து என்னுடையதுதான். இந்த கையெழுத்தை துஷ்டிக்கு போன சமயத்தில் போட்டுக்கொடுத்தேன். அந்த

கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ– 13** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 29.03.2022 ஆம் தேதி இரவு 9.00 மணிக்கு கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய ஆய்வாளர் என்னை அழைத்ததன்பேரில் நானும், எங்கள் தெருவை சேர்ந்த சங்கிலிபாண்டி மகன் இசக்கிமுத்துவும் கோவில்பட்டி பழைய பேருந்து நிலையம் முன்பு நின்று கொண்டிருந்த ஆய்வாளர் முன்பு ஆஜரானோம். அவர் எங்களை சாட்சியாக இருக்க அழைத்ததன்பேரில் நாங்கள் சம்மதித்தோம் என்றும், எங்கள் இருவர் முன்பும் எதிரி துரையை எவ்வித துன்புறுத்தலோ, தூண்டுதலோ, ஆசைவார்தையோயின்றி விசாரிக்க அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல்வாக்குமூலத்தில்தான் நானும், இசக்கிமுத்துவும், எதிரி துரையும் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றும் அதுதான் அ.சா.ஆ.13 என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என சொல்லப்பட்டது.</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No. 133/2022
Prosecution side witness for P.W.14

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. மாரிமுத்து** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.06.2026**

A3, A4 are present. Others are absent , U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**முதல் விசாரணை:-**

நான் கடந்த 30 வருடங்களாக தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி, வீரவாஞ்சிநகர் 7 வதுதெருவில் குடியிருந்து வருகிறேன். தீப்பெட்டி ஆபீசில் வேலை செய்து வருகிறேன். சாட்சி பிரபுவை எனக்கு தெரியும், எனது அண்ணன் மகன். ஆஜர் எதிரிகளை தெரியாது. குறிப்பாக இசக்கிதுரை, நம்பிராஜன், சுடலைமுத்து, துரை ஆகியோர்களை தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது, எங்கள் முன்பாக எதிரிகள் யாரையும் கைது செய்யவில்லை. எங்கள் முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை. இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன மணியை தெரியும். அவர் எனது மகன் முறை. இவ்வழக்கு சம்மந்தமாக என்ன தெரியும் என்று கேட்டால் மணி இறந்தது சம்மந்தமாக அவர் இறப்பு துஷ்டிக்கு சென்றிருந்தேன். வேறு ஒன்றும் தெரியாது. எதிரி இசக்கிதுரை கொடுத்ததாக கூறியுள்ள ஒப்புதல் வாக்குமூலத்தின் முதலாவது கையெழுத்து

என்னுடையதுதான். இந்த கையெழுத்தை துஷ்டிக்கு போன சமயத்தில் போட்டுக்கொடுத்தேன். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ– 14** ஆகும். மேலும் எதிரி சுடலைமுத்து கொடுத்ததாக கூறியுள்ள ஒப்புதல் வாக்குமூலத்தின் முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். இந்த கையெழுத்தை துஷ்டிக்கு போன சமயத்தில் போட்டுக்கொடுத்தேன். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ– 15** ஆகும். எதிரி நம்பிராஜன் கொடுத்ததாக கூறியுள்ள ஒப்புதல் வாக்குமூலத்தின் முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். இந்த கையெழுத்தை துஷ்டிக்கு போன சமயத்தில் போட்டுக்கொடுத்தேன். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ– 16** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 29.03.2022 ஆம் தேதி இரவு 9.00 மணிக்கு கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய ஆய்வாளர் என்னை அழைத்ததன்பேரில் நானும், எங்கள் தெருவை சேர்ந்த பேச்சிமுத்து மகன் பிரபு என்பவரும் கோவில்பட்டி பழைய பேருந்து நிலையம் முன்பு நின்று கொண்டிருந்த ஆய்வாளர் முன்பு ஆஜரானோம் என்றும், அவர் காவல்நிலையத்திற்கு வரச்சொன்னதன்பேரில் அங்கு சென்றோம் என்றும், அங்கு அவர் எங்களை சாட்சியாக இருக்க அழைத்ததன்பேரில் நாங்கள் சம்மதித்தோம் என்றும், எங்கள் இருவர் முன்பும் எதிரிகள் இசக்கிதுரை, சுடலைமுத்து மற்றும் நம்பிராஜன் ஆகியோர்களை தனித்தனியாக எவ்வித துன்புறுத்தலோ, தூண்டுதலோ, ஆசைவார்தையோயின்றி விசாரிக்க முதலில் எதிரி இசக்கிதுரை தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல்வாக்குமூலத்தில்தான் நானும், பிரபுவும், எதிரி இசக்கிதுரையும் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றும் அதுதான் அ.சா.ஆ.14, 15, 16 என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது

எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என சொல்லப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.